

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11.09.2024) சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் தெற்காசிய தடகள கூட்டமைப்பின் (SAAF) ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க தலைவர் டபள்யூ.ஐ.தேவாரம் (ஓய்வு) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11.09.2024) சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் தெற்காசிய தடகளக் கூட்டமைப்பின் (SAAF) ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியை கொடியேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஆசிய, தெற்காசிய, இந்திய, தமிழ்நாடு தடகள சங்க நிர்வாகிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. பவள விழா – செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்!

## தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் வீடுகள்தோறும் கழகக் கொடி ஏற்றிடுவீர்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



*தூத்துக்குடி, செப். 13 -*

*தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*1949ல் பேரறிஞர் அண்ணாவால் துவங்கப்பட்ட அரசியல் பேரியக்கம் தி.மு.க. தமிழ்நாட்டு மக்களின் அரசியல் சமூக பண்பாட்டு தளங்களில் செயல்பட்டு, சமூக நீதி மாநில சுயாட்சி, சுயமரியாதை போன்ற உயரிய முழக்கங்களுடன் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக 75 ஆண்டுகளாக செயல்படுகிறது தி.மு.கழகம்.*

*இந்தியாவில் ஒரு மாநில கட்சி முதன் முறையாக ஆட்சிக்கு வந்தது நமது தமிழ்நாட்டில்தான். பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் பொறுப்பை ஏற்று தமிழ் மக்களின் நெடுங்கால விருப்பமான தமிழ்நாடு எனும் பெயர் மாற்றம் செய்தது தி.மு.க ஆட்சியில்தான்.*

*அண்ணா மறைவிற்கு பின் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்த கழக அரசு தமிழ்நாட்டின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மிகக்கவனமாக செயல்பட்டது. தமிழ்நாட்டின் இன்றைய பன்முக வளர்ச்சிக்கு அடிப்படை கலைஞர் அவர்கள் செய்துள்ள தொலைநோக்கு பார்வையுடனான திட்டங்களின் விளைவு தான்.*

*பள்ளிக் கல்வி, உயர் கல்வி, தொழில்நுட்ப கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, மருத்துவம் போன்ற துறைகளில் தமிழ்நாடு மிக மிக முன்னேறிய நிலையில் உள்ளது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியும், இளைஞர்களின் வேலை வாய்ப்பும் தனது லட்சியமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார். எல்லோருக்கும் எல்லாம் என்று திராவிட மாடல் ஆட்சியை நடத்தும் முதலமைச்சர் கழகத் தலைவர் பவள விழா ஆண்டில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று வீதிகள் தோறும் கழகத்தினர் வீடுகள் தோறும் இரு வண்ண கொடியை ஏற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*இதனடிப்படையில் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் அனைத்து ஊர்களிலும், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அலுவலகங்களிலும், நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகளின் வீடுகளிலும், சார்பு அணிகளின் நிர்வாகிகளின் வீடுகளிலும் இரு வண்ண கொடியை ஏற்றிட வேண்டும்.*

*இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொது மக்கள் அவசியம் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## விருதுநகர் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிக்கை!



*விருதுநகர், செப். 13 -*

*விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*விருதுநகர் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் விருதுநகர் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வரும் 16.09.2024 திங்கட்கிழமை மாலை 05.00 மணிக்கு, விருதுநகர் சரஸ்வதி கிராண்ட் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.செல்வமணி தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள்/ நிர்வாகிகள், கழக பிற அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள் :*

*1. நாடாளுமன்றத் தேர்தலில் 40/40 வெற்றிக்காக நன்றி தெரிவித்தல்.*

*2. வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் தி.மு.கழகம் வெற்றியினை பெற்றிட.*

*3. கழக ஆக்கப் பணிகள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## சிவகங்கை நகரில் ரூ. 4 கோடி மதிப்பில் வாரச்சந்தை கட்டிட திறப்பு விழா!

*சிவகங்கை, செப்.13 -*

*சிவகங்கை நகராட்சி சார்பில் ரூபாய் 3 கோடியே 69 லட்சம் செலவில் புதிதாக வாரச்சந்தைகள் கட்டப்பட்டுள்ளது.*

*இந்த வார சந்தையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத். துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். காரைக்குடியில் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சிவகங்கை நகர் வாரச்சந்தையில் நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த் சிறப்புரையாற்றினார் .*

*இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நகர்மன்ற தலைவர் சி.எம். துரை. ஆனந்த், துணைத் தலைவர் எம் .கார் கண்ணன் கவுன்சிலர்கள் வீனஸ் ராமநாதன், நாச்சியார் வீர காளை, எஸ்.ஜெயகாந்தன், சி .எல். சரவணன், விஜயகுமார் நகராட்சி மேலாளர் கென்னடி ஒப்பந்ததாரர் வி.வெள்ளைச்சாமி, சண்முகராசன்,நிர்வாகிகள் திருநாவுக்கரசு, ஜெயக்குமார், ஆறு.சரவணன், நகராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.*

*இந்த வாரச்சந்தையில் 184. கடைகள் புதிதாக கட்டப்பட்டுள்ளது. கழிவறை, தண்ணீர் வசதி, மின் விளக்கு வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.*

